## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, நிகர சொத்து மாற்றக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, சபையின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் சபையின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். சபையை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை.

எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது சபையினது பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஹம்பாந்தோட்டை சூரிய மின்உற்பத்தி நிலையத்திற்கு இன்வேர்ட்டர்ஸ் (INVERTERS) கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்படுவதற்கு மீளாய்வாண்டில் ஏற்பட்ட செலவினம் ரூபா 22,145,944 ஆகும். இதனை மூலதனமாக்காது ஆண்டிற்கான செலவினமாக வருமானக் கூற்றில் எதிரீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிவுறுத்துரைப்படி இன்வேர்ட்டர்ஸ் (INVERTERS) நிறுவுவதற்குச் செலவாகிய தொகை மூலதனமாக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் அதிகாரசபையின் தேய்மானக் கொள்கைக்கும் அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இரண்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியச் செயற்திட்டங்களை NATIONAL APPROPRIATE MITIGATION) யுேஈயு மற்றும் ஜீவ உயிரியல் (BIOMASS) செயற்திட்டங்கள் சம்பந்தமாக 2016 ஆம் ஆண்டில் வருமானத்திற்கு எதிராக எதிரீடு செய்யப்பட வேண்டிய முறையே ரூபா 1,036,803 மற்றும் ரூபா 1,970,834 என்பன கொடுப்பனவு பொறுப்பாகத் தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டதால் நடைமுறைப் பொறுப்பு ரூபா 3,007,637 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | NAMA மற்றும் BIOMASS செயற்திட்டங்களுக்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காக உள்ள குறிப்பு 2019 நிதிக்கூற்றுக்களில் திருத்தம் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த சீராக்கலை மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் சரியான நடைமுறைப் பொறுப்பைக் காட்ட வேண்டும். |
| (இ) | 2016, 2017 ஆம் ஆண்டுக்கான ரூபா 1,290,079 செலவினமானது 2018 ஆம் ஆண்டின் செலவினமாக காட்டப்பட்டதால் மீளாய்வாண்டினது செலவினம் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இவற்றிற்குரிய உறுதிச் சான்றுகளைப் பரிசீலித்து 2019 ஆம் ஆண்டுக்காக கணக்குக் கூற்றில் திருத்தம் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. | ஒரு ஆண்டிற்கு செலவினம் அந்த ஆண்டின் வருமனத்துக்கெதிரே எதிரீடு செய்யப்பட வேண்டும். ஆண்டிற்கான கணக்கைத் தீர்வு செய்வதற்கு ஆண்டின் இறுதியளவில் சகல கிளைகளினதும் உறுதிச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான விதிமுறை அமைய வேண்டும். |
| (ஈ) | கிரமோபாய பிரிவின் ST 04 நிகழ்ச்சித் திட்டத்தின் ரூபா 1,29,000 செலவினம் தவறுதலாக வேறொரு முற்பணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதால் மீளாய்வாண்டினது செலவினம் அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கிரமோபாய ST 04 நிகழ்ச்சித்திட்டச் செலவினமான ரூபா 1,296,000 தவறுதலாக வேறொரு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டினது நிதிக் கூற்றுக்களில் இது திருத்தம் செய்யப்படும். | பேரேட்டின் கீழான சகல கொடுக்கல் வாங்கல்களினதும் பிழையற்ற தன்மையை பிறிதொரு உத்தியோகத்தர் பரிசீலிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | காலக் கழிவாகிய ரூபா 4,360,584 மற்றும் அரச மானியம் என்பன காசுப்பாய்ச்சல் கூற்றில் சரிவரசந் சீராக்கல் செய்யப்படவில்லை. தொழில்படு மூலதன வேறுபாட்டுக் கணிப்பின் போது ரூபா 980,915 குறைவாகவும் முதலீட்டு நடவடிக்கைகளால் ஆன நிகர காசுப்பாய்ச்சல் ரூபா 68,266 அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக, காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் பிரகாரம் சரிவரத் தயாரிக்கப்பட்டிராமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றின் மூலம் சீர்செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 க்கமைய காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | வேலை முடிவடைந்து ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றிலிருந்து மாற்றஞ் செய்யப்பட்ட ரூபா 457,490 பெறுமதியுடைய சொத்துக்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்ட போதும், நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்தாகக் காட்டப்படவில்லை. | சீர் செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்து பதிவேட்டில் குறிப்பிடப்படும் கொடுக்கல் வாங்கல்கள் பேரேட்டினதும் குறித்துக் கொள்ளப்படுவதை உறுதி செய்ய வேண்டும். |
| (எ) | காணிச் சுவீகரிப்புக்கென அதிகார சபை அபிவிருத்தி யாளர்களிடமிருந்து பெற்றிருந்த கொடுப்பனவு செய்ய வேண்டிய வைப்பாகிய (நடைமுறைப் பொறுப்பு) ரூபா 5,049,485 நிதிக் கூற்றுக்களில் நெடுங்காலமாகக் குறிப்பிட்டபோதும், அதனை உறுதி செய்வதற்குப் போதிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | காணிச் சுவீகரிப்புக்கு அபிவிருத்தி யாளர்களிடமிருந்து பெறப்பட்ட தொகைக்கென பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டு நாளதுவரையாக்கப் படுகின்றது. | அபிவிருத்தியாளர் களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகை குறிப்பிடப்பட்டு முறையாகப் பதிவேடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | ஆசிய அபிவிருத்தி வபக்ச் செயற்திட்டம் ஒன்றிற்குரிய உபகரண வரியாகிய ரூபா 2,299,935 நடைபெறும் வேலையின் கீழ் அநேக ஆண்டுகளாக இருந்த போதும், மீளாய்வாண்டிலும் அதனை ஆராய்ந்து கணக்குகளில் சீராக்கல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. | யுனுடீ செயற்திட்டத்திற்குரிய உபகரண வரி 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் திருத்தம் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட வேண்டும். (செயற்திட்டத்திற்கு வேறொரு கணக்கு தயாரிக்கப்படுவதால்) |
| (ஐ) | முன்னைய ஆண்டினது நிதிக்கூற்றுப் புள்ளி விபரம் மீளக் குறிப்பிடப்பட்டதாக (RESTATED) நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டபோதும் அவ்வாறு செய்யப்படவில்லை. அருவச் சொத்துக்கள் காலக்கழிவு செய்யப்பட்டபோதும், காலக் கழிவுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப் படுத்தப்படவில்லை. | மீள வரையப்பட்ட நிதிக் குறிப்பு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | காலக்கழிவுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியன

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டில் கல்வி வலய நிகழ்ச்சித் திட்டங்களுக்கென அறிவு முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் 9 மாகாணங்களில் வலய அலுவலகங்களுக்கு ரூபா 13,348,087 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 3,765,051 முற்பணத்தைத் தீர்வு செய்வது 2018 டிசம்பர் 31 வரை நடைபெறாதிருந்தது. | குறித்த கல்வி வலயங்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணத்துக்கான வேலை முடிந்த உடனேயே குறித்த பிரிவால் மேற்பார்வையிடப்பட்டு பணம் தீர்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெற வேண்டிய முற்பணத்தின் கீழ் உள்ளடங்கிய ரூபா 1,093,512 தொகையானது 01 முதல் 04 ஆண்டுகளாக முன் கொண்டு வரப்பட்டவாறிருந்தது. அதனை அறவிடுவதற்கு அதிகாரசபை மீளாய்வாண்டு முடிவு வரை தவறியிருந்தது. | பெறவேண்டிய முற்பணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | வழங்கிய முற்பணம் மீளாய்வு செய்யப்பட்டு குறித்த பணி முடிவடைந்ததும் தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கொடுப்பனவு செய்ய வேண்டியன

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் கடன்கொடுத்தோராகக் கணக்குகளில் காட்டப்பட்ட தொகை ரூபா 15,735,724 ஆகும். இதில் ரூபா 6,952,796 ஐந்து மேற்பட்டவை. இதில் ரூபா 7,247,388 ஒன்று முதல் 04 ஆண்டுகள் வரையில் அமைந்தனவாகும். சேர்ந்து நின்ற செலவினத்தில் உள்ளடங்கிய ரூபா 73,44 மீதியானது ஏறக்குறைய 8 ஆண்டுகள் வரையில் அமைந்ததாகும். இவை முன்கொண்டு வரப்பட்டவாறிருந்ததுடன், இவற்றைத் தீர்வு செய்வதற்கு அதிகார சபை மீளாய்வாண்டு இறுதியிலும் தவறியிருந்தது. | ஏனைய கொடுப்பனவுக் கணக்கு, கடன் கொடுத்தோர் கணக்கு, சேர்ந்து நின்ற செலவினக் கணக்கு என்பவற்றைத் திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளை மீளாய்வு செய்து கணக்கீட்டுக் காலத்தின் போது தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அணுசக்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 46(3) ஆம் பிரிவு | அணுசக்தி அதிகார சபைக்கு கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு 30 ஆண்டு கால குத்தகையில் காணி ஒன்றைப் பெறவும் அதற்கான திட்டத்தைத் தயாரிப்பதற்கு 2015 | அதிகாரசபையின் பிரதான கட்டிடம் "நுநேுசுபுலு ீடுருளு" எனும் தொனிப் பொருளின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது. மக்களுக்கு மின்வலுச் சிக்கனம் மற்றும் குறைந்த இயற்கை வளப் பாவனை மூலம் மின்சாரச் சிக்கனத்துடன் கட்டிடத்தை நிர்மாணிக்கலாம் என்பதனை | அதிகார சபையின் அதிகாரச் சட்டத்திற்கு மின்சக்தி நிதிய நோக்கத்திற்கும் இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முதல் 2018 வரை ரூபா 65,794,255 கூட்டுத்தொகை அதிகாரசபையால் அதன் நோக்கங்களுக்கு முரணாக மின்வலு நிதிய முதலீட்டிலிருந்து பெறப்பட்டிருந்தது. | மக்களுக்குக் கட்டிடம் தெளிவுபடுத்தும் மிக்சக்தியை மக்கள் சேமிக்கக் கூடிய நேரடிச் செய்முறையாக உள்ளதால் “அது கணக்காய்வுப் பிரிவினால் நிதியத்திற்கு முரணான அணுசக்தி அலுவலக நிர்மாண வேலை எனக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள இயலாதுள்ளது. அதிகார சபையின் அதிகாரச் சட்டத்தில் மக்களுக்கு அறிவூட்டுவதற்கான ஏற்பாடுகளுள்ளதால் நிதியத்தின் நிதியைச் செலவிட முடியும். இச் செலவினம் யாவற்றிற்கும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை II ஆம் அத்தியாயத்தின் 13.7 ஆம் பந்தி | உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமையாற்றம் பணிக்கப்படாதவிடத்து அவருக்கு மேலதிக ஊதியம் வழங்கப்படலாகாது. எவ்வாறாயினும், அதற்கு விதிவிலக்காக அதிகார சபையானது பதில் கடமையாற்றும் பதவிக்கு 2013 முதல் 2019 வரை பதில் கடமைப் படியாக ரூபா 3,714,952 கூட்டுத் தொகை, எரிபொருள் படியாக ரூபா 4,853,050, போக்குவரத்துப் படியாக 2015 முதல் 2019 வரை ரூபா 5,020,000 என வழங்கியிருந்தது. | அதிகார சபையானது 2007 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு இயங்கத் தொடங்கியது அதன் பூர்வ நிறுவனமாகிய மின்சக்தி சேமிப்பு நிதியத்தின் உத்தியோகத்தர்களது சேவையைப் பெற்றுக் கொண்டதால்தான். அதிகார சபையின் முதலாவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கான அதிகாரசபையின் நடவடிக்கைகள் தொடர்பான கூட்டிணைந்த திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகார சபையின் நோக்கத்தை ஈடேற்றத் தேவையான மனிதவளத்தை அதிகாரசபை பெறக்கூடியவாறான ஆட்சேர்ப்பு நடவடிக்கையைத் தயாரிப்பதற்கு தொடர்புடைய ஒவ்வொரு பிரிவினதும் அங்கீகாரத்தைப் பெற முடியாதுள்ளது. ஆட்சேர்ப்பு நடைமுறை தற்சமயம் தயாரிக்கப்பட்டு பெயரிடப்பட்டுள்ளது. இப்பதில் கடமையானது பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்துடன் தற்சமயம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவைக்கும் சுற்றறிக்கை அறிவுறுத்துரை களுக்கும் அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணங்கள்<br>----------------------------------- | | | |
| | நிதிப்பிரமாணம் 454 | இறுதிப் பிரமாணத்தின் படி பொருட் பதிவேடு பேணப்படவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிவுரைத்துப்படி பொருட் பதிவேட்டைப் பேணுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பொருட் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணங்கள்<br>------------------------------------ | | | |
| | நிதிப்பிரமாணம் 757(1) | சொத்துக்கள் நேரடியாகப் பரிசீலிக்கப்படவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிவுறுத்துரைப்படி குறித்த படிவத்தில் 2019 ஆம் ஆண்டிற்கான சொத்து பரிசீலனை நடைபெறவுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் படி சொத்துக்கள் நேரடியாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். |
| (உ) | 1978 டிசம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கைப் பிரகாரம் ரூபா 978,732,975 கூட்டுத் தொகையுடைய சொத்துக்களின் பொருட்டு நிலையான சொத்துப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாக்கப் பட்டும் பேணப்படவில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டை முறையாக்குவதற்கு கணனி மென் அணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. 2020 மே மாதமளவில் அது பூர்த்தியாகும் என எதிர்பார்க்கின்றது. | சுற்றறிக்கைப் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகப் பேணப்பட வேண்டும். |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | சகல ஊழியர்களுக்குமான ஆட்சேர்ப்பு நடைமுறையை அதிகாரசபை தயாரித்து அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. குறைந்த தரம் தொடக்கம் முகாமைத்துவ உதவியாளர் வரையான பதவிகளுக்கு மாத்திரமே தற்சமயம் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (எ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>------------------------------------ | | | |
| | 2011 டிசம்பர் 12 ஆந் திகதிய 28/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் | இதற்குத் தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் ஏற்கனவே அமைச்சின் ஊடாக நடைபெறுகின்றது. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இலங்கை பொறியியல் சேவையில் உள்ளடங்கலாக அதிகாரசபையின் பொறியியலாளர் பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு 2016 ஆகஸ்ட் தொடக்கம் 2018 டிசம்பர் 31 வரை தொழில்சார் படியாக ரூபா 10,751,000 (இலங்கை பொறியியல் சேவை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே உரித்தான) அதிகாரசபையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| "சுவீட் ஏசியா" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெறப்பட்டு எஞ்சியிருந்த ரூபா 4,548,176 தொகையானது 2011 தொடக்கம் மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு ஒன்றிலும் மின்சக்தி நிதியத்திற்குரிய ரூபா 15,000,000 க்கு மேற்பட்ட தொகை அநேக ஆண்டுகளாக தேசிய சேமிப்பு வங்கி சேமிப்புக்களைக் கணக்கொன்றிலும் எதுவித பயனுமின்றி வைப்பிலிடப்பட்டிருந்தன. | பணிப்பாளர் சபையினதும் திறைசேரியிலும் அங்கீகாரத்துடன் இத்தொகையை முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தொடர்புடைய அங்கீகாரத்துடன் முதலீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டினது செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 91,854,384 மிகை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 49,834,339 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 42,020,045 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமான அதிகரிப்பே இந்த அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை அணுசக்தி அதிகாரசபையானது இலங்கை மின்சார சபைக்கு 2012 நவம்பரில் RCL (Regional Centre for Lighting) நிலையத்தின் முகாமைத்துவம் மற்றும் சொத்துக்களை ஒப்படைத்திருந்தது. எவ்வாறாயினும், இந்த ஒப்படைப்பு முறையாக நடைபெறாததால் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்திற்கு அதிகார சபையால் வழங்கப்பட்ட குத்தகை வாடயைாகிய ரூபா 8,033.270 தொகை 2019 டிசம்பர் வரை இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடுவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. | RCL (Regional Centre for Lighting) நிலைய வாடகையை அதிகார சபையின் வாடகையாக இனங்காண்பதற்கு பணிப்பாளர் சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த நிறுவனத்திடம் விசாரித்தறிந்து பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ‘‘சுவீட் ஏசியா’’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐரோப்பா சங்கத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 7,334,354 தொகையில் ரூபா 3,135,202 பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 93 இல் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 2010, 2011 ஆம் ஆண்டுகளில் அறிக்கையின் சகல உத்தியோகத்தர்களுக்கும் தொழில்சார் படியாக வழங்கப்பட்டிருந்தது. சட்டபூர்வமற்ற இக்கொடுப்பனவு குறித்த உத்தியோகத்தர் களிடமிருந்து அல்லது பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு அமைச்சின் செயலாளரால் 2012 டிசம்பர் 03 ஆந் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபை ஆலோசனைப் பிரகாரம் குறித்த தொகையை அறவிடுதல் தொடர்பாகப் பணிப்பாளர் சபைக் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படுகின்றது. | பணிப்பாளர் சபைத் தீர்மானத்தை துரிதமாக அமுல்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதியன்று பணிக்கப்பட்டவாறு 2019 நவம்பர் வரை அமுலாக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | அணுசக்தி அதிகார சபையின் ஆரம்பம் முதலாக ஊழியர் சம்பள மாற்றக் கணிப்பில் ஏற்பட்ட வழுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைப் பிரகாரம் 2007 முதல் 2011 வரை கூடுதலாக வழங்கப்பட்ட அப்பணத்தையும் படியையும் குறித்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்குஅல்லது திருத்தம் மேற்கொள்வதற்கு அதிகாரசபை இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனத்தின் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கான பணிப்பாளர் சபை அங்கீகாரம் அடங்கிய குழு ஒரு நியமிக்கப்பட்டது. இது தொடர்பாகக் கவனம் செலுத்துவதும் அக்குழுவின் பிரதான பணிகளில் ஒன்றாகும். அக்குழுவின் அறிக்கை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. | பணிப்பாளர் சபை நியமித்த குழுவின் அறிக்கையை துரிதமாகப் பெற்று நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஈ) | 2007 செப்டம்பர் 28 ஆந் திகதிய உடன்படிக்கைப் பிரகாரம் 18 மாத காலத்தினுள் புரொடோடைப் வாகனங்கள் மூன்றை அபிவிருத்தி செய்வதற்கு 2007 ஆம் ஆண்டில் வெளிநபர் ஒருவருக்கு ரூபா 7,956,800 வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 12 ஆண்டுகள் கழித்து 2019 டிசம்பர் 30 வரை அதிகார சபை அது தொடர்பாக முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. | இச் செயற்திட்டத்திற்கான செலவினத்தை ஆக்கபூர்வமாக்குவதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டது. இணக்கத்தை ஏற்படுத்துவதற்காக நடுநிலையாக ஒருவரது உதவி பெறப்பட்டது. உடன்படிக்கைப் படி செயற்திட்டத்தை நிறைவேற்ற வசதி இல்லாததால் அதன் பொருட்டு மாதிரி வடிவத்தில் காட்சிக்கு வைக்கக்கூடிய வாகனம் ஒன்றைத் தயாரித்து வழங்க அந்நபர் இணங்கி உள்ளனர். இது பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படவுள்ளது. | சட்டபூர்வமாக உடன்படிக்கையில் இணங்கியவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடைபெறும் வேலையின் காட்டப்பட்டுள்ள ரூபா 10,333,800 பெறுமதியான 2 பணிகள் அநேக ஆண்டுகளாக நடைபெறாதிருப்பதுடன் அதன் பொருட்டு 2018 ஆம் ஆண்டில் எதுவித செலவும் மேற்கொள்ளப்பட்டிராமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்கவில்லை. | பொகவந்தலாவை பவன அமுர்தர் கோபுர வேலைகள் 2019 ஆம் ஆண்டில் முடிவடைந்தன. 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் அது காட்டப்படும். அதன் பெறுமதி ரூபா 2,377.000 ஆகும். இலத்திரனியல் மோட்டார் வாகன உற்பத்திச் செலவாகிய தொகை ரூபா 7,596,800 ஆகும். தற்சமயம் அது தீர்வு செய்யப்பட்டவாறுள்ளது. | நிகழ்ச்சித்திட்டம் நிரந்தரமாகவே கண்காணிக்கப்பட வேண்டும். அவற்றை நிறைவேற்றுவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கைகளை கையாள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 நிதி குறைவாகப் பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் இந்த 04 செயற்திட்டங்களினதும் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட ரூபா 526,135,593 செலவினத்திற்கும் உள்ளவாறான ரூபா 350,391,197 செலவினத்திற்கும் இடையே மொத்த நிதியேற்பாடாகிய ரூபா 175,744,396 இல் 33 சதவீத சேமிப்பு அவதானிக்கப்பட்டது. | அநேக வெளிநாட்டு உதவியுடனான செயற்திட்டங்களை அமுலாக்கும் போது உள்ளவாறான காலத்தினுள் வைப்பு செய்யப்பட வேண்டியபோதும், செலவினத்தை அதிகரிப்பதில் ஏற்படும் தாமதம் காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. காலப்பகுதியின் போதே உள்ளவாறான செலவினத்தை அறிவிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வரவு, செலவுத் திட்டம் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட வேண்டும். தாமதமின்றி செலவினத்தை நிதிப் பிரிவில் பெறுவதற்கான முறையான விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) கோரிக்கையாளர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் (ODSM) 2018 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் | வரிசை அமைச்சு இச்செயற்திட்டங்களை 2017 ஆம் ஆண்டில் அமுலாக்க முற்பட்டது. அதன் அமுலாக்கும் பொறுப்பு தேசிய | செயற்திறனை அதிகரிப்பதற்கு போதியளவு மனிதவளத்தை பயன்படுத்துவது சம்பந்தமாக |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்தில் 06 பிரதான பிரிவுகளின் கீழ் மீளாய்வாண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 17,000,000 ஆகும். எவ்வாறாயினும், அதில் ரூபா 8,876,452 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. 48 சதவீதமான ரூபா 8,123,548 எஞ்சியிருந்தது. செலவிடப்பட்ட தொகையில் அலுவலகக் கட்டிட வாடகை அடங்கலாக நிர்வாகச் செலவினம் ரூபா 5,957,701 ஆகவிருந்தது. செயற்திட்டங்களுக்குச் செலவிடப்பட்டது ரூபா2,918,751 மாத்திரமே. | செயற்பாட்டுக் குழுவினதாகும். அதிகார சபை அச் செயலகத்துடன் தொடர்புடைய நிர்வாக நடவடிக்கைகளில் பங்குபற்றுவதை மாத்திரமே பணியாகக் கொண்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான முகாமைத்துவக் கூறை ஸ்தாபிப்பதற்குத் தேவையான பதவியணியை அங்கீகரித்துக் கொள்வதற்கு நாம் பல சந்தர்ப்பங்களில் பல காரணங்களைச் சுட்டிக்காட்டி வரிசை அமைச்சும் முகாமைத்துவத் திணைக்களமும் பதவியணியை இதுவரை அங்கீகரிக்காது உள்ளன. இவ்வாறான நிலைமையில் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுவது இந்த அதிகார சபை ஊழியர்களது பங்களிப்பின் மூலமே.<br><br>இதன் காரணமாக, ஏற்பாடு செய்யப்பட்ட நிதி முற்றாகச் செலவழிக்கப்படாது போனமை தேவையான மனிதவளப் பற்றாக்குறை காரணமாகவே. | அமைச்சுடன் துரிதமாக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இந்துரான சர்வதேச மேம்பாட்டு நிலையச் செயற்திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டில் ரூபா 25,000,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் 26 சதவீதமான ரூபா 6,392,059 மாத்திரமே 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்பட்டிருந்தது. 74 சதவீதமான ரூபா 18,607,961 செயற்திட்டத்திற்குச் செலவிடப்படாததால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | இந்துரானவுக்கு ரூபா 5 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டபோதும், அது "இந்துரான ராஜகருணா ஞாபகார்த்த சிறிய அளவிலான நீர் மின்சார பயிற்சி நியை" ஆரம்ப நிர்மாண வேலைகளுக்கே பயன்படுத்தப்பட்டது. பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு பணிப்பாளர் சபை ரூபா 15 மில்லியனை அங்கீகரித்தால் அப்பணியானது 2019 நிர்மாண வேலை 02 ஆம் | குறித்த செயற்திட்டத்திற்கு அவ்வப்போது பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. முதலாவது கட்டத்தை 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டது. | |

**3.4 செயற்திட்ட அல்லது மூலதன வேலைகளின் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் அணுசக்தி அதிகார சபைக்கும் இடையேயான 2015 யூன் 22 ஆந் திகதிய 631 ஆம் இலக்க வரி உடன்படிக்கையின் பிரகாரம் 30 ஆண்டுகள் குத்தகைக்கு பத்தரமுல்லவில் 75 பர்ச்சர்ஸ் காணியை 2015 ஆம் ஆண்டில் அதிகாரசபை பெற்றிருந்தது. அதன் முன்னேற்றம் 2019 டிசம்பர் மாதமளவில் கணிப்பிட்டபோது ரூபா 5,984,915 செலவில் திட்டம் மாத்திரமே நிர்மாண வேலை ஆரம்பிக்கப்படவில்லை. | திட்டமிடப்பட்டு நிதி ஏற்பாடு கோரப்பட்டபோதும், அரசாங்கத்தின் தீர்மானத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டியேற்பட்டது. அதன் பிரகாரம், இக்கட்டிட நிர்மாண வேலைக்கு மூல அங்கீகாரம் கிடைத்தபோதும், தேசிய திட்டமிடல் பிரிவினது (NATIONAL PLANNING DIVISION) அங்கீகாரம் பெறப்பட வேண்டும். 2019 ஆம் ஆண்டில் அரசாங்கம் மேற்கொண்டு கொள்கை சரியான தீர்மானத்தின் படி எமது கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது. | ஏறக்குறைய 05 ஆண்டுகளாகி விட்டதால் மாற்று வழிகளில் கவனம் செலுத்த வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைப் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், ஏறக்குறைய 08 மாத தாமதத்தின் பின்னர் 2019 நவம்பர் 04 ஆந் திகதியன்றே நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2018 ஆம் ஆண்டில் அதிகார சபையில் நிதிப் பிரிவுக்கெனத் தலைவர் ஒருவர் இல்லாததால் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது. 2017 ஆம் ஆண்டினது நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 05 ஆந் திகதி வழங்கப்பட்டது. ஆகவே, 2017 கணக்காய்வுப் பரிந்துரையும் உள்ளடக்கி 2018 ஆம் ஆண்டிற்கான | சுற்றறிக்கைப் பிரகாரம் குறித்த தினத்தில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைக் குறித்த காலத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்றோம். | |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின்5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் தொலைநோக்கை குறைந்தளவு 03 ஆண்டுகளுக்கு விளக்கும் குறுகிய, நெடுங்கால கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கேற்ப இலக்கை அடைவதற்கு நிறுவனத்தை வழிநடாத்துவதற்குப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்கவில்லை. | மிக்சக்தி கொள்கை தயாரிக்கப்பட்டதன் பின்னர் அதற்கேற்ப கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பது நோக்கமாக இருந்தது. தற்சமயம் மின்சக்தி கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப கூட்டிணைந்த தட்டத்தைத் தயாரிப்பது ஆரம்பமாகி உள்ளது. | சுற்றறிக்கைப் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

**4.3 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபை வருடாந்தம் செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்த போதும், அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து ஆண்டின் இறுதியில் அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்றோம். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மீளாய்வு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும் |